**மாதிரி வினாத்தாள்**

தாவரங்களில் இனப்பெருக்கம் - பகுதி I

10th Standard

**அறிவியல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.
III.வினா எண் 15- ற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

Time : 01:00:00 Hrs

Total Marks : 45

## பகுதி - அ

5 x 1 = 5

1) ஒரு செல் உயிரிகளான அமீபாவிலும் பாக்டீரியாவிலும் நடைபெறும் இனப்பெருக்க வகை ........................

(a) துண்டாதல் (b) இரண்டாகப் பிளத்தல் (c) அரும்புதல் (d) ஸ்போர் உண்டாதல்

2) பூக்கும் தாவரங்களின் பாலினப்பெருக்க முறையில் நடைபெறும் முதல் நிகழ்வு ....................

(a) கருவுறுதல் (b) முளைத்தல் (c) மீண்டும் உருவாதல் (d) மகரந்தச் சேர்கை

3) கீழுள்ளவற்றில் பொருத்தமான கூற்று .................

(a) நகரும் திறனற்ற, மெல்லிய சுவரையுடையவை ஸ்போர்கள்.

(b) சில ஆல்காக்கள், பாக்டீரியங்கள், பூஞ்சைகளில் உண்டாகும் நகரும் தன்மையுடைய பாலிலா ஸ்போர்கள்.

(c) ஏகைனீட்டுகள்,பூஞ்சைகளில் உண்டாகும் ஓர் உட்கரு போன்ற நகரும் திறனற்ற பாலிலா ஸ்போர்கள், கொனிடியா.

(d) சாதகமற்ற சூழ்நிலைகளில் ஆல்காக்களில் உண்டாகும் தடித்த சுவரையுடைய உடலச் செல்கள் ஏபிளானோஸ்போர்கள்

4) கருவுற்ற சூற்பை,கனி ஆகும். ஒரு மலரின் பல இணையாத சூலக இலைகள் கொண்ட மேல்மட்டச் சூற்பையிலிருந்து உருவாகும் கனி ...................

(a) திரள்கனி (b) கூட்டுக்கனி (c) தனிக்கனி (d) பலகனி

5) நீரில் ஊறவைத்த விதையை அழுத்தும்பொழுது ................................ வழியாக நீர் கசிகிறது.

(a) இலைத்துளை (b) லெண்டிச்செல் (c) மைக்ரோபைல் (d) முளைவேர்

## பகுதி - ஆ

6 x 2 = 12

6) பாலிலா மற்றும் பால் இனப்பெருக்க முறைகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.

7) உடல இனப்பெருக்கம் என்பது என்ன?
அ) பிரையோபில்லம் ஆ) ஸ்பைரோகைராவில் காணப்படும் உடல இனப்பெருக்க முறைகள் யாவை?

8) தாவரங்களில் நடைபெறும் பாலினப் பெருக்க நிகழ்வுகளைச் சரியான முறையில் வரிசைப்படுத்துக.
விதை உருவாக்கம், மகரந்தச்சேர்க்கை, விதை பரவுதல், கருவுறுதல்.

9) வரையறு - மகரந்தச்சேர்க்கை

10) வரையறு - கருவுறுதல்.

11) பின்வருவனவற்றில்காணப்படும் மகரந்தசேர்க்கைக்கானகாரணிகளைப் பெயரிடுக.
அ) நல்ல மணமும் தேன் சுரப்பியும் கொண்ட பல வண்ணங்களை கொண்ட மலர்கள்.
ஆ) நிறமற்றது /மணமற்றது /தேன்சுரப்பு அற்றது.ஆனால் மகரந்தத்துகள்கள் உலர்ந்த, இலேசான, தூள்களாக இருக்கும். சூல்முடி இறகு போன்று காணப்படும். மேற்கண்ட இரண்டு வகை மகரந்தச்சேர்க்கை நடைபெறும் தாவரங்களைக் குறிப்பிடுக.

## பகுதி - இ

5 x 5 = 25

12) 1.அ )கனி உருவாகும் நிகழ்ச்சியைக் கூறுக.
ஆ )இந்நிகழ்ச்சினைச் சுருக்கமாக விவரிக்க.
இ)அந்நிகழ்வினைக் குறிக்கும் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிக்க.

13) 2.பூக்கும் தாவரங்களில் நடைபெறும் பாலினப் பெருக்க முறையில் ஈடுபடும் இரண்டு நிகழ்வுகளை எழுதுக.
அ )முதல் நிகழ்வு மற்றும் அவற்றின் வகைகளை விவரிக்க.
ஆ)அதன் நன்மை தீமைகளை எழுதுக.

14) அ)கருவுறுதலின் விளைவாக உருவானது கனி, கருவுறுதல் நடைபெறுவதால் ஏதேனும் கனி உருவாகிறது?
ஆ)கனிகள் வகைப்பாட்டின் அட்டவணையைத் தருக.

15) a) திரள்கனி, கூட்டுக்கனி தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் ஒப்பிடுக.

**(OR)**

b) இருவித்திலைத் தாவர விதையின் அமைப்பை விவரிக்க.

*****************************************